முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1339

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

30.05.2023, செவ்வாய்கிழமை

1. பிரணவ சக்திமிகு அரங்கா வாழ்க
   பிரம்ம ஞான சித்திதரும் தேசிகா வாழ்க
   வரம் தந்து உலக மக்களை மீட்க
   வடிவேலன் என் சக்தியாக அவதரித்த குருராஜனே வாழ்க
2. வாழ்க என வாழ்த்தி சுப்ரமணியர் யானும்
   வழங்குவேன் அரங்கனுக்கு ஞான அறிவுரை ஆசி
   ஊழ்போக்கும் மகா சக்தி நீயே
   உலகை மாற்றும் மகா யோகி நீயே
3. தாழ்வில்லா உன் தொண்டர்படைக்கு
   தனித்துவம் தயவே மகா சக்தியாக
   ஆகவே ஆற்றல் வரமீந்து
   அனைத்துத் திக்கும் அன்னதான சேவையாற்றி
4. மாற்றம் புரிகின்ற மாதவராஜனே
   மகா ஞானியே உந்தன் பலம் தர்மத்தில் இருக்க
   இருக்கவே தர்மநெறி உலகமெல்லாம் பரவி நின்று
   தயவுகொண்ட மக்கள் படைகளாக உலகம் மாற
5. மாறவே எங்கும் எதிலும்
   மகத்துவம் அரங்கன் உன் சக்தியாகக் கூடி
   அறமெனும் சக்திவழி உலகமே
   ஆற்றல்பட ஞானத்தலைமை காணும்
6. காணுமப்பா ஞானிகள் நிறைந்த
   கலியிடரை வெல்லும் ஞான ஆட்சிக்காலமாக
   வருங்காலம் அரங்கன் உன் சேவையால் மாறும்
   வரமாக நீதருகின்ற சக்தி வழி இந்த பேருலகம் அற்புதம் காணும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–